ஆய்வில் இருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில், பணிகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

**திரு. இ. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**2—**

## ஏரியை ஆழப்படுத்துதல்

***2479—திரு. வி.பி. நாகைமாலி:**

*மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கீழ்வேளூர் தொகுதி, திருப்பூண்டி மேற்கு ஊராட்சியில் உள்ள கீரநேரி ஏரியை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டத்தில் திருப்பூண்டி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்கு மேற்கே காமேஸ்வரம் என்றொரு தலம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் கீரநேரி என்ற ஒரு பெரிய ஏரி இருக்கின்றது. சுமார் 100 ஹெக்டேர் பரப்பளவுள்ள அந்தப் பெரிய ஏரியின் மேற்குப் பகுதி,* Traditional Water Bodies *என்ற திட்டத்தின்கீழ் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் தூர்வாரப்பட்டது. அதன் கிழக்குப் பகுதி மண்மேடிட்டிருக்கிறது. நாகப்பட்டினம்–வேளாங்கண்ணி இரயில்வே பாதைக்கு அந்தப் பகுதியிலிருந்து மண் எடுப்பதற்கு நாகப்பட்டினம் மாவட்ட*

*2022 ஜனவரி 6]*

*ஆட்சியர் அவர்கள் அனுமதியளித்ததையடுத்து, அந்தப் பகுதியிலுள்ள மண்ணை தற்போது எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, ஒட்டுமொத்தமாக அந்த ஏரியின் கிழக்குப் பகுதியும், மேற்குப் பகுதியும் தூர்வாரப்பட்டு, கீரநேரி ஏரியில் நீர் நிரப்ப வழிவகுக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அளிக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

**திரு. வி.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, திருப்பூண்டி மேற்கு ஊராட்சியிலுள்ள கீரநேரி ஏரியை ஆழப்படுத்தி, நீர் நிரப்பி, பாசனத்திற்குக் கொண்டு வருவதற்கு வழிவகுக்கப்படும் என்று உறுதிமொழியளித்த மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10—15*

*கீழ்வேளூர் தொகுதி, திருப்பூண்டி மேற்கு ஊராட்சியிலுள்ள காமேஸ்வரம் என்ற கிராமத்தில் கீரநேரி எனும் ஏரி அமைந்துள்ளது. அந்த ஏரி மழை நீரால் நிரம்பக் கூடியதாகும். இது 2.50 சதுர கிலோ மீட்டர் நீர்பிடிப்புப் பரப்பளவைக் கொண்ட ஏரியாகும். ஏரியின் தண்ணீர் கொள்ளளவு 15.76 மில்லியன் கன அடி ஆகும். இதன் கரைகளின் நீளம் 4,000 மீட்டர் ஆகும். இந்த ஏரியிலிருந்து இரண்டு வழங்கு வாய்க்கால்களின் மூலமாக 184.39 ஹெக்டேர் நெல் வயல்கள் பாசன வசதி பெறுகின்றன. ஆகவே, இந்த ஏரியை மிகவும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, கரைகளை மேலும் உயர்த்திக் கட்டி நீரைச் சேமித்தால், இந்த ஏரியைச் சுற்றியுள்ள இன்னும் கூடுதலான நிலங்களை நெல் பாசனப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியும். அப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவைக்கும் கொண்டுவர முடியும். இதனால் அப்பகுதி விவசாயிகள் பொருளாதார ரீதியாக மேலும் பயன் பெறுவர். எனவே, இந்த ஏரியை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும், கரைகளை உயர்த்திக் கட்டி நீரைச் சேமிக்கவும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறே செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லிவிட்டு அமருங்கள்.

**திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

**3—**

**பாதாள சாக்கடைத் திட்டம்**

*2763—**திரு. கா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அதிராம்பட்டினம் பேரூராட்சி தற்போது நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதிராம்பட்டினம் நகராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கின்படி 31,066 ஆகும். தற்போதைய மக்கள்தொகை 34,172 ஆகும். இந்நகராட்சியில் 49.82 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளும் 7.80 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன; மேலும், 7,226 குடியிருப்புகளும் உள்ளன. பாதாள சாக்கடைத்